★ பக்கங்கள் விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 வைகாசி: 17 றஜப்: 4 இதழ்: 110
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31-5-79

# இந்திராவை விசாரிக்க விசேஷ நீதிமன்றங்கள்

புதுடில்லி, மே 30

அவசரகாலம் அமுலில் இருந்தபோது திருமதி இந்திரா காந்தியும், அவரது மகன் சஞ்சய்காந்தியும் மற்றவர்களும் புரிந்ததாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் பற்றி விசாரிப்பதற்கெனப் புதுடில்லியில இரு புதிய நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

சாதாரண நீதிமன்றங்களில் இக்குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிப்பதில் காலதாமதமாவதைத் தடுப்பதற்காகவே இந்நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

திருமதி காந்தி மீது 12 குற்றச்சாட்டுகளும், திரு. சஞ்சய்காந்தி மீது 20க்குமதிகமான குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்படவிருக்கின்றன.

## திருமதி பூட்டோ தயார்

(ராவல்பிண்டி)

மக்கள்கட்சி கேட்டுக்கொண்டால் நவம்பர் மாதம்

[6-ம்பக்கம் பார்க்க]

# கூட்டணிக் கருத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்ய இலங்கை அரசின் விசேஷ குழு அமெரிக்கா செல்லும்?

## அரசியல் வட்டாரங்களில் தகவல்

[கொழும்பு]

இலங்கை அரசின் சிறுபான்மை மக்கள் தொடர்பான [illegible]களையும், குறிப்பாக தமிழ் மக்களுக்கு அரசு வழங்கியுள்ள உரிமைகளையும் அமெரிக்க மக்களுக்கும் அரசுக்கும் எடுத்துக்கூறி விளக்க வைப்பதற்காக விரைவில் அரசாங்கத்தின் சார்பில் குழுவொன்றை அங்கு அனுப்பி வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

அமெரிக்காவிற்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கமும் இப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரமும் செய்துள்ள பிரசாரங்கள் தொடர்பாக அரசாங்கம் கவலை கொண்டுள்ளது.

குறிப்பாக, அண்மையில் மஸாசுசெட்ஸ் மாநில் சட்டசபையில் இலங்கை தமிழர் தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பாகவும் அங்கு திரு சிவசிதம்பரம் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவு குறித்தும் அரசு கவலை கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தப் பிரசாரங்களுக்கு ஆப்பு வைக்கும் விதத்திலும் இப்பிரசாரங்களினால் அரசுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை நிவர்த்தி செய்யும் வகையிலும் அமெரிக்காவுக்கு ஒருகுழுவை அனுப்பிவைக்க வேண்டும் என அரசு வற்புறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதே சமயம் இலங்கை அரசுபற்றி அமெரிக்காவில் [illegible]யப்பட்டுள்ள பிரசாரங்களுக்கு எதிர்ப்பிரசாரம் செய்யும் விதத்தில் இலங்கை அரசின் அதிகாரப்பூர்வ குழுவொன்றை அனுப்புவதற்கு

[6-ம் பக்கம் பார்க்க]

திருநெல்வேலி

## வங்கிக் கொள்ளை முயற்சி வழக்கில் எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி கிராமிய வங்கிக் கொள்ளை முயற்சிவழக்கில் எதிரிவிடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில், 1975ம்ஆண்டு மே மாதம் 19ம்தேதி திருநெல்வேலி வங்கியில் தில்லைநம்பி அருணாசலம் என்பவரது பொறுப்பிலிருந்த பணத்தையும், உடைமைகளையும், கொள்ளையடிக்க முயன்றதாகவும், மற்றும்சிலருடன்சேர்ந்து அதே தினத்தில் வேம்பராய் என்ற இடத்தில் வே. விஜிதம்பியின் மோட்டார் காரை கொள்ளையடித்ததாகவும் செ. தனபாலசிங்கம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி சி. நாகராசாவும், அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசாவும் ஆஜரானார்கள்.

எதிர் தரப்புச் சட்டத்தரணி சி. நாகராசா கிளப்பிய பிரச்னையொன்றையடுத்து எதிரி விடுதலை செய்யப்பட்டார். [ஈ-ஷ]

நெடுந்தீவு

## யுவதி மரண வழக்கில் பஸ் சாரதி விடுதலை

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு பஸ் விபத்து மரண வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் திரு. ஜெகஜோதி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 78 பெப்ரவரி 4ல் நெடுந்தீவைச் சேர்ந்த இ. போ. ச. சாரதி நமசிவாயம் கந்தையா பஸ்ஸை கவலையீனமாகச் செலுத்தியதாகவும் விபத்தைத்தடுக்க நடவடிக்கை எடுக்கத்தவறியதாகவும்போதுமான 'பிரேக்' இல்லாமல் பஸ்ஸைச் செலுத்தியதாகவும் மாட்டுவண்டியுடன் மோதி இவ்விபத்தில் 17 வயதுடைய யுவதி பசுபதி வேதநாயகிக்கு மரணத்தை விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] சட்டத்தரணி பி. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

விசாரணையின்பின் நீதிபதி எதிரியை விடுதலைசெய்து நீர் விரும்பிய தொகையை மரணமான பெண்ணின் குடும்பத்திற்கு நஷ்டஈடாகக் கொடுக்கலாம் என்று தெரிவித்தார். [ஈ-ஷ]

## சமக்கிரானந்தா சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். திவ்ய ஜீவன மண்டபத்தில் நாளை காலை, கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் சுவாமி சமக்கிரானந்தா

(6-ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி

## ஐ. தே. க. உறுப்பினர் ராஜினாமா

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி நகரசபைக்கு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஆர். தர்மேந்திரன், பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

ராஜினாமாக் கடிதத்தை அவர் ஐக்கிய தேசியக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு ஹரிஷா அபேவர்த்தனவுக்கு அனுப்பிய கடிதப் பிரதியை, யாழ் தேர்தல் உத்தியோகத்தர் திரு அ. ஜெயரத்தினத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அம்பாறை மாவட்ட அமைச்சின் கீழ் [illegible] பதவியொன்றைப் பொறுப்பேற்கச்செல்லவிருப்பதால், பதவியை ராஜினாமாச் செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரசபை ஐ. தே. க. பட்டியலில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ள திரு. தர்மேந்திரன், ராஜினாமாச் செய்துள்ளதால், பட்டியலில் 3ம் இடத்தைப் பெற்றுள்ள திரு வி செல்வரத்தினம் சாவகச்சேரி நகரசபை உறுப்பினராக நியமிக்கப்படுவார்.

ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச்செயலாளரிடமிருந்து இவரது ராஜினாமா உறுதிப்படுத்தப்பட்டு யாழ் தேர்தல் உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டபின், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இவரது ராஜினாமா உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு திரு செல்வரத்தினம் புதியஉறுப்பினராக நியமிக்கப்படுவார். [ஈ-ஷ]

## யாழ். மக்களின் பரீட்சையில் ஓரளவு தேறியுள்ளேன்

### பதவி மாறும் யாழ் விசேஷ ஆணையாளர் கூறியது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பொதுஸ்தாபனங்களை நிர்வாகிப்பது சிரமம். யாழ்ப்பாண மக்கள் பொதுவில் யாரையும் இலகுவில் பாராட்டவும் மாட்டார்கள். அவர்களது பரீட்சையில் தேர்வு பெற்றால்தான் பொதுசேவையில் ஈடுபடுபவர்களை ஏற்றுக் கொள்வார்கள், பரீட்சையில் தேர்வு பெற்றார்களா என்பதையும் அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அந்தப் பரீட்சையில் ஓரளவு வெற்றி கண்டுள்ளேன் என்றேற்தான் கருதுகிறேன்.'

இவ்வாறு, கடந்த இருபத்திரண்டு மாதங்கள் விசேட ஆணையாளராக, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் கடமையாற்றி அப்பதவியிலிருந்து மாறும் திரு. கே. சிவஞானம், தமது கடந்தகால அனுபவங்களை பத்திரிகையாளர்களுக்கு விளக்குகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

'எனது சேவைக்காலத்தில் பலவகையான அரசியல் தலையீடுகளும் ஏற்படக்கூடும் கொண்டேயிருந்தன அவற்றுக்கெல்லாம் முகம்கொடுத்து எந்தக் கட்சிக்காரர்களையும் அரவணைத்து சேவையாற்றியுள்ளேன்.

எனது சேவைக்காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, அபிவிருத்திவேலைகளை பூர்த்தி செய்துள்ளேன். பாஷையூர் மருத்துவமனை அபிவிருத்தி உட்பட சில வேலைகள் மட்டும் பூர்த்தியாகவில்லை இவற்றை புதிய கவுன்சில் பூர்த்தி செய்யும் என நம்புகிறேன்.

உள்ளூராட்சி சபைகளின் புதிய சட்டப்படி, மேயர் உட்பட சகல உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவுள்ள அலவன்ஸ் இம்முறை எமது நிதியாண்டு வரவுசெலவுத் திட்டத்தில் மேலதிக வருமானத்திலிருந்து வழங்கமுடியும். இதற்கு மாதமொன்றுக்கு ரூபா 13,500 தேவைப்படுகிறது.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் பணிகளுக்கு 1 6[illegible] தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களை வருமாறு [illegible] பதவி [illegible] நிரந்தர பணியாளர்கள் சேவைசெய்கின்றனர்.

மணிக்கூட்டுக் கோபுரத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு 500000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான டெண்டர்கள் முடியாமையினால் புதியகவுன்சிலே இதை பூர்த்தி செய்யும் என்றார். [செ]

## வரி விளம்பரம்

### தேவை

மின்சார உபகரணங்களை விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர் தேவை. விபரங்களுக்கு 15-06-79 முன் நேரில் தொடர்பு கொள்ளவும். கலா றேடர்ஸ், கண்டி ரோட், இளிநொச்சி 2597

பதிவுப்பத்திரத்துடன் உள்ள கைத்தறிகள் உதிரிப்பாகங்களுடன் தேவை. நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்க. பாவித்த நல்ல நிலையிலுள்ள ஆங்கிலம், தமிழ் ரைப்றைட்டரும் தேவை. ஆ. கனகசபை, 27/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 2587

### விற்பனைக்கு

நாஷனல் பனசோனிக் றேடியோ, சகிதசேர்ந்த T.V. மொடல் TR 200 E. A C., 110, 120, 240,- 50/60 HZ 41W, D. C., 12V - 18W திரை அளவு 12 அங்குலம். விபரங்களுக்கு: S சண்முகசுந்தரம், 32, பலாலி வீதி, உரும்பிராய். 2601

சகல அச்சுவேலைகளும் செய்வதற்கு தகுந்தமுறையில் அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 320, 392/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2603

5 ஸ்ரீ இத்தாலியன் லம்பிறட்டா ஸ்கூட்டர் நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தருமலிங்கம் தருமசேகரன், ...ரெழு. 2593

### தேவை

வட்டவாள் அரிவுகாரரும், குழிவாள் அரிவுகாரரும் தேவை. வீட்டுடன் காணிகள் விற்கவிரும்புவோர் எஸ். கணபதிப்பிள்ளை ஸ்ரீதேவி மரவியாபாரம், 28, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2609

### விற்பனைக்கு

லண்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 4½''×1½' - 9 கனம் (மொத்தம்) கொண்ட 2 அரிவுவட்ட வாள் விற்பனைக்குண்டு. காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் பார்வையிடலாம். எஸ். கணபதிப்பிள்ளை ஸ்ரீதேவி மரவியாபாரம், 28, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2608

### வாடகைக்கு

புல்டோசர் யந்திரம் வாடகைக்குண்டு. தேவையானோர் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். 54, 1-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். 2604

## இன்று கொடியேற்றம்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 9ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ)

## பொருட்காட்சியும் சிறுவர் நிகழ்ச்சியும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் ஆண்டை முன்னிட்டு நல்லூர் கைக்குளசி சி த பெ. பாடசாலையில் இன்று பொருட்காட்சியும், சிறுவர் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

காலை9-30 முதல் நடைபெறும் பொருட்காட்சியை, யாழ்ப்பாணக் கல்வி அதிகாரி திரு. சு. சிவசுப்பிரமணியம் ஆரம்பித்து வைப்பார் சிறுவர் நிகழ்ச்சியை நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் ஆரம்பித்து வைப்பார். (நா)

## நல்லூர் கிராமசபை கேள்வி விளம்பர அறிவித்தல்

நல்லூர் கிராமசபை விசேட ஆணையாளர் அவர்களால் 1979-ம் ஆண்டு ஆனி மாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிவரை கீழ்க்காட்டிய வேலைகளுக்கு இச்சபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ ஏற்றுக் கொள்ளப்படும். ரூபா 50/- வைப்புப்பணமாகவும் ரூபா 10/- ரெண்டர் பணமாகவும்கட்டியதானபெயரிலே வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நல்லூர் கிராமசபையில் 1979ம்ஆண்டு ஆனிமாதம் 13-ந் திகதி புதன் கிழமை மாலை 2-30 மணிவரை வழங்கப்படும். இது சம்பந்தமான மற்றைய விடயங்களை நல்லூர் கிராமசபைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம். ரெண்டர்ப்பத்திர பிரதிகளில் ஒன்று பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

1. செங்குந்தா ஒழுங்கை,
2. கனைமகள் வீதி.
3. கலையங்காடு வாசிகசாலை ஒழுங்கை,
4. பொன்னையா வீதி,
5. அரசடி வீதி வேலை.

ஒப்பம்,
ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் கிராமாட்சி மன்றம்.
2605

## பண்டத்தரிப்பு கிராமச்சபை கேள்வி விளம்பரம்

பண்டத்தரிப்பு கிராமச்சபை விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரரிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் 1979-06-14-ந் திகதி முற்பகல் 11-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூபா 50/- வைப்புப் பணமாகவும் ரூபா 10/- பத்திரப் பணமாகவும் 1979-06-12-ந் திகதி பிற்பகல் 3-30 மணிவரை எமது கிராமச்சபை அலுவலகத்தில் செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் எமதுகிராமச்சபைஅலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### வேலைகளின் விபரம்

1. விளான் பண்டத்தரிப்பு வீதியில் இருந்து உயரப்புலம். வீதி. (அபிவிருத்தி. இ)
2. விளான் பண்டத்தரிப்பு வீதியில் இருந்து உயரப்புலம் வீதி. (பன்முகம். இ)

கி. கோபாலரத்தினம்
விசேட ஆணையாளர்,
கிராமச்சபை, பண்டத்தரிப்பு
கிராமாட்சி மன்றம்,
பண்டத்தரிப்பு,
28-05-79 2606

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

யாழ் / வண். நாவலர் மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க

அங்குரார்ப்பணக்கூட்டம்

6-6-79 புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு இவ் வித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகும். பெற்றூர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் யாவரையும் அழைக்கின்றேன்.

சி. வைத்திலிங்கம்,
அதிபர்
2600

வேலணை மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

மேற்படி சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் 13-6-79 புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

பெற்றூர், ஆசிரியர், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

2602
அதிபர்.




'அம்புஷ்', கம்பளப் புழுக்கள் உங்கள் பயிர்களை அழிக்க முன்பு அவற்றை அழிக்கிறது.

உங்கள் மிளகாய், வெங்காயப் பயிர்களைப் பாதிக்கும் பொகுட்டுச் சந்துக் குத்தி, இலையுண்ணும் கம்பளப் புழுக்கள், அனைத்தையும் உடனே அழிக்க, விரைந்து செயலாற்றும் அம்புஷ் தெளியுங்கள். அம்புஷ் நெடுங்காலம் வலிமையுடன் நிலைத்து நிற்பதால், அடிக்கடி மீண்டும் மருந்து தெளிக்கும் தேவையை அது தவிர்க்கிறது, உங்கள் மிளகாய் வெங்காயப் பயிர்களைப் பொகுட்டுச் சந்துக் குத்தி, மற்றும் இருமிப் பீடைகளிலிருந்து பாதுகாக்க அம்புஷ் பாவியுங்கள்.

CIC கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352, கொழும்பு
தொலைபேசி: 28421

TAL 5148


## கோட்டு விற்பனவு விளம்பரம்

M B 13875

காலஞ்சென்ற 1. அருணாசலம் தம்பிஐயா அருணாசலம்பிள்ளை வழக்காளி

1. A. அருணாசலம்பிள்ளை இராமநாதன்
1. B. அருணாசலம்பிள்ளை சிதம்பரநாதன்
1. C. அருணாசலம்பிள்ளை இறங்கநாதன்
1. D. அருணாசலம்பிள்ளை சிவலிங்கநாதன்.

வழக்காளிகள்

முதலாம் பேரின் இடத்தில் பதிவிடப்பட்ட 2. பொன்னையா சிவசுப்பிரமணியமும் 3. பெண் பவளராணியும் எல்லோரும் கல்லாரை மல்லாகம்.

எதிராக

சின்னத்தம்பி தர்மலிங்கம் - ஏழாலை மத்தி ஏழாலை எதிரி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டின் M B 13875 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1979 ம் ஞு யூன் மீ 13 ம் திகதி புதன்கிழமை மு. ப. 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபாய் 5,370 பின் 6-6-73 தொடக்கம் 14-6-74 வரை ரூபா 4,000 10% வட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும்வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 387 சதம் 02½ இதில் 10-3-73 இல் ரூபா 2,000 செலவில் 150/- உம் மேலும் ரூபா 2,000 உம் கொடுக்கப்பட்டது இன்னும் ரூபா 12 முத்திரைச் செலவால் சேர்த்துக்கொள்ளப்படவேண்டியது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை அத்தியடியும் மறு பிரிவுகளும் நிலப்பரப்பு 10¾ வடலிகளும் கிணறும் வீடும் மேற்கெல்லையில் நிற்கும் வேம்பிற் பங்கும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு வயித்திலிங்கம் பெண் புவனேஸ்வரியின் ஆதனம் தெற்கு கணபதிப்பிள்ளை பெண் விசாலாட்சியின் ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு (2¾) இரண்டே முக்காலும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

"விதானைவளவு"
சித்தன்கேணி
19-4-79

இ. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.
2604

# பிள்ளைகளின் தேவைகளை அவர்களின் மனோபாவத்துடனேயே அணுகவேண்டும்

இறைவனை மிகவும் நேசிக்கின்றேன்!
என்பிள்ளைகளை மிகவும் துடுக்கானவர்களாக குழப்படி செய்பவர்களாக, நண்டுகள்போன்று குறு, குறு என ஊர்ந்து செல்பவர்களாக படைத்தார்.

பின்னர், அவர்களை மல்லிகைப் பூப்போல் சிரிக்கச்செய்து, பரிசுத்தமான மகிழ்வை அவர்கள்மேல் பளிச்சிடச் செய்தார்.

சின்னஞ்சிறு மலர்களின் கன்னங்களிலும் ரோசாப்பூப் போன்ற உடல்களிலும் இறைவன் பளிச்சிடுகிறார்.

என்ன அழகு, சின்னஞ்சிறு தேவதூதர்கள் போல் மினுங்கும் பொழுது. அந்த மென்மையான அழகை அள்ளி அணைத்து கொஞ்ச வேண்டும் போலுள்ளது.

யாரோ ஒரு பெயர் தெரியாத இயற்கை கவிஞனின் (அமெரிக்கர்) இந்த அழகு சொட்டும் உணர்ச்சியின் ஆக்கம் நெஞ்சைத் தொடுகிறது.

சின்னஞ்சிறு மலர்கள்...... இது—வசந்தத்தின் வாரிசுகள் ... வாழ்வின் சுவைகளே அவர்கள்-தாம் சர்வதேச சிறுவர் ஆண்டின் செல்வங்கள் அவர்கள். சிறுவர்களுக்கான ஆண்டு இது எனும் பொழுது மனதில் களிப்பும், கூடவே மனித குல வரலாற்றின் ஒவ்வொரு ஆண்டும் சிறுவர் ஆண்டே என்பதையும் நினைவுகூரச் செய்கிறது.

கொஞ்சும் கிளிகள் போன்று மழலை பேசும் இளம்பிஞ்சுகள் வீடுமுழுவதும் நண்டுகள் போன்று ஊர்ந்து கொண்டு, திரியும் பிள்ளைகள்.

வண்ண, வண்ணப் பூக்களாக மலர்ந்து நிற்கும் சின்னஞ்சிறு மலர்கள் யார் இவர்கள் என்ற கேள்வி உலகெங்கும் ஒலிக்கின்றது.

[சர்வதேச சிறுவர் ஆண்டை ஒட்டி இம் மாதம் 28ம் திகதி முதல் அடுத்த மாதம் 2ம் திகதி வரை இலங்கையில் சர்வதேச சிறுவர் வாரம் கொண்டாடப்படுகிறது]

வறுமையின் காரணமாக பொருளாதார தாக்கத்தினால், எத்தனை சிறுவர்களின் வாழ்வு இளமையிலே கருகியுள்ளது. வருங்காலத்தின் பிரகாசம் குன்றி, அதன் ஏக்கங்களை மனதில் தேக்கி, அதனால் ஏற்படும் விரக்தியினால் எத்தனை சிறுவர்கள் தடம்மாறி நடந்து சமுதாயத்தின் வேண்டாத கருவியாகியுள்ளனர் இதற்கான காரணங்கள், சரியான வழியிலே நடக்கக்கூடியதான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுக்காத பெற்றோர்களும் நாட்டின் நிர்வாகங்களுமே.

சரியான திட்டமிடப்பட்ட ஒருமுறையை சிறுவர்களின் நலனுக்காக, அவர்களை நாட்டின் வருங்காலப்பிரஜைகளாக ஆக்குவதற்காக உருவாக்கும் வரை எந்த ஒரு நாடுமே முன்னேறப்போவதில்லை. நாங்கள் தொடங்கியதை நாளை தொடர்ந்து முடிக்கப் போகிறவர்கள் அவர்கள்!

"நீங்கள் தொடங்கியதை நாளை தொடர்ந்து நடத்தப்போகும் ஒரு மனிதனை இன்றைய பிள்ளைகள்...... நீங்கள் எந்தவிதகொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளலாம் ஆனால் அவற்றை மேற்கொண்டு தொடர்வது அவர்களில் தங்கியுள்ளது. அந்த மனிதனே, இன்றைய உங்கள் நகரங்களையும் மாவட்டங்களையும் நாடுகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவுள்ளான்... ... மனித குலத்தின் தலைவிதியை அவன் கைகளில்" என்று "ஆபிரகாம்லிங்கன்" கூறியிருக்கிறார்.

வருங்காலத்தை உணர முடியாத நிலையில் இது தான் வாழ்வு என்ற நிலையில் இருளுக்குள் வாழும் சிறுவர்கள் கோடிக்கணக்கில் உலகெல்லாம் பரந்து வாழ்கின்றனர், விண்வெளியை வெற்றி கொண்ட யுகத்தில் இன்றைய சிறுவர்களின் வருங்காலமெனும் இருண்ட நிலையை பாரா

லும்வெற்றி கொள்ளமுடியாமலிருப்பதில் காரணம். விடை...விடை... இது தான் இன்றைய உலகின் அவல ஒலி.

ஏக்கங்களுடனும் பெருமுச்சுடனும் வாழும் எத்தயோசிறுவர்களின் வேதனை ஒலிகள் பலருக்குப் புரியாத ஒன்று. வறுமை, வசதியின்மை வாய்ப்பின்மை போன்றவை சமூகத்தின் வருங்கால பரம்பரையின் வளர்ச்சிக்கு எவ்வளோ தாக்கமாயிருப்பதை நாம் ஒவ்வொருவரும் உணரக்கூடியதாக உள்ளதுஎந்த ஒரு சிறுவருமே ஒரு நேர சாப்பாடின்றி உறங்கக் கூடாது என்ற சர்வதேச உணவுத்தாபனத்தின் குறிக்கோளை உலகில் வறுமையின் தாக்கத்தை உணர்த்துகின்றது. வளர்ந்து வரும் நாடுகளிலும், ஆபிரிக்கநாடுகளிலும் தென்அமெரிக்க நாடுகளிலும் பொதுவாகவே காணப்படும் தாழ்ந்த பொருளாதார சூழ்நிலையினால் பல குடும்பங்கள் வறுமையின் பிடியில் சிக்குண்டுள்ளதை உலகறியும்.

இன்றைய சிறுவர்களை நாம் புறக்கணிக்கும் ஒவ்வொரு கணமும், நம் சமுதாயத்தின் நாளைய அழிவிற்கு வழிகோலுகின்றோம்.

-- ச. வி. செல்வரத்தினம் --

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## சோஷலிஸ அமைப்பில்தான் சிறுபான்மை மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும்

வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற தேர்தல்கள் மூலம் இப்பகுதிமக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் தமிழ்க்காங்கிரஸினதும் தலைமைப்பீடங்களில் தாம் கடந்த 30 வருடங்களாக வைத்திருந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். எனினும் இவ்விரு கட்சியினதும் தேர்தல் பிரசாரங்களை ஆராயும்போது சில உண்மைகள் வெளிப்படுகின்றன:

1977 பொதுத்தேர்தல் தொடக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ்க்காங்கிரசுக்கும் ஏற்பட்டு கோடு வரைக்கும் போய்விட்ட குழும்பத்தகராறு இன்னும் முடிந்தபாடாக இல்லை.

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் சிலர் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும் சுயநிர்ணயத்தையும் இடதுசாரிக்கட்சிகள் அங்கீகரித்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள்.

வட்டமேசை மாநாடு மூலம் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்காவிடில் சுயாட்சிக் கோரிக்கைக்காகப் போராடப்போவதாக திரு. குமாரின் தமிழ்க்காங்கிரஸ் சொல்லிவருகின்றது.

இவ்விரு கட்சிகளும் தமிழ் மக்களின் பொதுவான இன மொழிப் பிரச்னைகள் பற்றிப் பேசுவதேயல்லாமல் சாதாரண தமிழ்த்தொழிலாளிகள் விவசாயிகள் பிரச்னைகளை பற்றி பேசத்தவறுவது மாத்திரமல்லஅவர்களது அன்றாட உரிமைகளுக்காகப் போராட முன்வருவதுமில்லை.

இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மூலம் தமிழ்ஈழக் கொள்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதை தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமைப்பீடம் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அண்மையில் பாராளுமன்றத்தில் பேசுகையில் தான் ஏற்கக்கூடிய வேறெந்த நியாயமான தீர்வையும் அரசாங்கம் தமிழ்மக்கள் முன்வைத்தால் தமிழ்மக்கள் அதை ஏற்கப்பண்ண தாம் முன்னிற்பதாக கூறியுள்ளார்.

### ஐ. தே. க. வடக்கில் அடிவைத்துள்ளது

யு. என். பியினர் 20 ஆண்டுகளுக்குப் பின்பு தமது பணத்தையும் இன்றைய அரசாங்க ஆதிக்கத்தையும் பாவித்து வடக்கில் முதல் அடிவைத்துள்ளனர். கூட்டணியினரை ஒதுக்கி அவர்களுக்குச் சவாலாக நேரடியாக தமிழ்மக்களுடன் தொடர்புகொள்ளப்போகின்றார்களாம். யு. என். பியை ஆதரிப்பவர்கள் அத்தனை பேரும் சந்தர்ப்பவாத சுயநலமிகளும் விலைக்கு வாங்கப்பட்டவர்களென்றும் கூற முடியாது. சில யு. என். பித் தலைவர்கள் இனவாதரீதியில் பேசியும் அச்சுறுத்தியும் இருந்தபோதிலும் அரசியல் ரீதியில் சில தமிழ் முதலாளிகளும் மேல்தட்டு மக்களும் அவர்களை ஆதரிக்கின்றார்கள் என்பதை மறுக்கமுடியாது

ஆனால் சிறுபான்மை மக்களின் தீர்வுக்கான திட்டமெதனையும் யு என் பி முன்வைக்கவில்லை பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளைத் தீர்க்கலாமென்று கூறும் யு என் பி, ஸ்ரீ. ல. சு. க, த. வி. கூ, த. கா. தலைவர்கள் இடதுசாரிகள் முன்வைத்துள்ள பிரதேசசுயாட்சியென்ற மாற்றுத்திட்டம் ஒன்று இருப்பதுபற்றி ஒன்றும் சொல்வதில்லை சிறுபான்மையினர் தீர்வுகாண எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதனால் பெரும்பான்மை சிறுபான்மை மக்களிடையே பிரச்னைகள் மேலும் சிக்கலாவதும் பதட்டநிலை தொடர்ந்து இருப்பதும் இந்நாட்டில் தொடர்ந்தும் இனமோதல்களுக்கும் கலவரங்களுக்கும் அடிகோலக்கூடும். அவ்வித கலவரங்கள் ஏற்படின் இந்நான்கு கட்சிகளுமே அதற்குரிய பொறுப்பை ஏற்க வேண்டும்.

இடதுசாரி இயக்கம், குறிப்பாக - கம்யூனிஸ்ட்கட்சி நாட்டின் யதார்த்தநிலையை அனுசரித்து ஐக்கியஇலங்கையை

[5ம் பக்கம் பார்க்க]


Jem
ஜெம்



10,000 க்கு மேற்பட்ட "ஜெம்" மின்சார மோட்டர்கள் தற்பொழுது இலங்கையில் பாவிக்கப்படுகின்றன.

10,000க்கு மேற்பட்ட "ஜெம்" மின்சார மோட்டர்கள் உற்பத்தி செய்து விற்பனையாகி யுள்ளன. இதன் சிறப்புக்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

முற்றிலும் மூடப்பட்டதும் விசிறியால் குளிரடைவதுமான இந்த மோட்டர், மேற்கு ஜேர்மன், E. BLUM KG தாபனத்தின் தொழில் நுட்பக் கட்டிணைப்புடன் தரமான உறுப்புக்களைக் கொண்டு, அரசாங்கத்தின் அங்கீகாரம் கொண்ட ஜினசேன இலெக்ட்ரிக் மோட்டர்ஸ் லிமிட்டெட்டால் உற்பத்தி செய்யப்பட்டவை.

"ஜெம்" மின்சார மோட்டர்கள் 1/4 எச். பி. முதல் 15 எச் பி வரையிலும், 950 ஆர். பி. எம். முதல்3000ஆர். பி. எம். வரையிலான வேகத்திலும் பல்வேறு ரகங்களில் உண்டு.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும், பின்வரும் எமது பிரதான விநியோகத்தர்களிடமும் கிடைக்கும்:

நியூடோன் இலெக்ட்ரிக்கல்ஸ்,
141, 143, ஸ்டேன்லி ரோட்
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 7016.

ஜினசேன லிமிட்டெட்
இல. 4, ஹாவ்லொக்பிட்டி ரோட்,
கொழும்பு 2. தொலைபேசி: 26558 - 9.

MelADS

# "யாழ். இளைஞருக்கு வேலைவாய்ப்பு: ஆராயவே இங்கு வந்தேன்"

## யாழ்ப்பாணத்தில் பிரதி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தபோது பதினொரு லட்சம் இளைஞர்கள் வேலையற்றிருந்தனர். இவ் இளைஞர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக எமது அரசாங்கம் இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சு என்று ஒன்றை நிறுவியுள்ளது ''

இவ்வாறு யாழ் பரதானவீதியிலுள்ள ஐக்கியதேசியக் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய இளைஞர் விவகார வேலைவாய்ப்பு பிரதிஅமைச்சர் திரு காமினி அத்துக்கோறள கூறினார்.

திரு. ஏ. ஜி. இராசசூரியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதி அமைச்சர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

''இந்த அமைச்சு மூலம் இந்த நாட்டில் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்

யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற இளைஞர்களுக்கு எந்த வகையில் வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்பதை அறிந்து செல்வதற்காகவே நான் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளேன்.

''எமது அமைச்சு சுயமுயற்சி வேலைத்திட்டம் ஒன்றையும் இந்தநாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்துள்ளது.

''நாம் யாழ்ப்பாணத்திலுள்ள பல அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டு அதில் முடிந்த அளவு யாழ்ப்பாண இளைஞர்களுக்கே வேலை வழங்க எண்ணியுள்ளோம்

''எமது நாட்டு அபிவிருத்தி வேலைக்கு வேண்டிய அளவு பொருளுதவி புரிய வெளிநாடுகள் காத்துக்கொண்டிருக்கின்றன ஆனால் அபிவிருத்தித் திட்டத்தில் வேலைசெய்வதற்குப் போதிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் இல்லாதிருக்கிறது. அக்குறையைப் போக்குவதற்கும் எமது அமைச்சு ஏற்ற நடவடிக்கை எடுக்க உள்ளது

''எமது கொள்கைத் திட்டத்தை மக்கள் ஏற்றுள்ளனர் என்பதைக் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் எமது கட்சிக்குக் கிடைத்த வாக்குகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. வடபகுதி மக்களும் எமது கட்சியை அங்கீகரித்துள்ளனர் என்பதை வவனியா, சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் எமக்குக் கிடைத்த வாக்குகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது''

திருவாளர்கள்: எஸ் சிவபாலசிங்கம், ஜி நல்லையா, நூர்முஹம்மது ஆகியோரும் பேசினர். [கொ-அ]

## மன்னாரில் காசி ஆனந்தன்

]மன்னார்[

கடந்த எட்டு மாதங்களாக சிறையிலிருந்த கவிஞர் காசி ஆனந்தன் இன்று மன்னார் ...குதிக்கு விஜயம் செய்ய... அவர் இங்கு ... தினங்கள் தங்கியிருந்து மன்னார்தமிழர்கூட்டு இளைஞர் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட கருத்தரங்குகளில் உரையாற்றவுள்ளார்.

கருத்தரங்கிற்கு மன்னார் எம்.பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தலைமை வகிப்பார். [செ]

## முத்திநெறிபற்றி விளக்கம்

[மாவிட்டபுரம்]

"முத்திநெறி என்பது நாம் நினைத்தவுடன் கிடைத்துவிடுவதல்ல. அதற்கான தருணம் வந்து சேரும்போது அது தானாகவே கிடைத்துவிடும். நாயன்மார்களின் வரலாறு இதை நமக்குப் புகட்டுகின்றது. ஆகவே நமது குறிக்கோள் முத்திநெறியை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். நாம் செல்லும் பாதை சரியாக இருக்க வேண்டும். அப்போது முத்திநெறி எம்மை வந்து சேரும்'

இவ்வாறு தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள அறிஞர் திரு. வி. இராமமூர்த்தி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

மாவை ஆதீனத்திற்கு வருகை தந்த திருச்செந்தூர் செந்தில் துறவி சுவாமிஜியுடன் வந்திருந்த அவர்மேலும் பேசுகையில், மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்பதில் மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும், என்றார்.

செந்தில் துறவி சுவாமிஜி தமது அருளுரையில், ஈழத்தில் தென்னகத்தை விட சமயப்பற்று, ஆலயவழிபாடு போன்றவை மேலோங்கி நிற்பது குறித்து மகிழ்ச்சியடைவதாகக் கூறி, அந்நிலை மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சுவாமிஜி காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி, வீமன்காமம் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்தார்.

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த 500 பணியாளர்களின் அடையாள வேலைநிறுத்தம் நேற்று மூன்றாம் நாளுடன் கைவிடப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பண்டத்தரிப்புக் கிளைத் தலைவர் திரு எஸ். சின்னராசாவின் முயற்சியினால் வட்டுக்கோட்டை எம். பி திரு. ரி. திருநாவுக்கரசு இரு பகுதியினருடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து மீண்டும் வேலைக்குத் திரும்புவதற்கு பணியாளரின் எழுத்து மூலமான சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## தற்கொலை

[மாவிட்டபுரம்]

மதுபோதையில், மதுவுடன் சேர்த்து நஞ்சையருந்தி தமது உயிரைப் போக்கிக் கொண்டார் குடும்பஸ்தர் ஒருவர்.

மயிலிட்டியைச் சேர்ந்த இரத்தினம் ஜெயசீலன் [வயது 36] என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

கடந்த சிலமாதங்களாக தினமும் மதுவில் மூழ்கிவந்த காலமானவர், மனைவியுடன் அடிக்கடி தகராறு பண்ணி வந்ததாகவும், அன்றும் எழுந்த சச்சரவின் சம்பவதினம் மதுவருந்திவிட்டு அதனுடன் கிருமிநாசினியையும் அருந்திவிட்டு வீடுவந்து சேர்ந்ததாகவும் விசாரணையின் போது தெரிய வந்தது

மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## இலக்கியக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ்ப்பாணக் கிளை எதிர்வரும் 2ம் திகதி சனிக்கிழமை இலக்கியக் கருத்தரங்கொன்றை நடாத்துகின்றது.

சன்மார்க்க ஐக்கியசங்க நூல்நிலையத்தில் கலாநிதி கா. சிவத்தம்பி தலைமையில் ''இன்றைய இலக்கியநிலை'' என்னும் பொருள்பற்றிய இக்கருத்தரங்கில் திருவாளர்கள் சி மௌனகுரு, திரு. இ. முருகையன், செ. யோகநாதன், செ யோகராஜா, மு நித்தியானந்தன் ஆகியோர் கருத்துரை வழங்குவுள்ளனர். (கா-லி)

## பேராபத்தை விளைவிக்கும்

# 130 விமானங்கள் அமெரிக்காவிடம் உள்ளதாம்

வாஷிங்டன், மே. 30

அமெரிக்காவில் சேவையில் ஈடுபட்டுள்ள 'டி-சி-10' விமானங்களில் பேராபத்தைக் கொடுக்கும் குறைபாடுகள் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அடுத்து 130 விமானங்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளன. இது அமெரிக்க விமானங்களில் 10 சதவீதமாகும்,

சிக்காகோவில்கடந்த வாரம் விபத்துக்குள்ளான 'டி-சி-10' விமானத்தில் பயணம் செய்த 275 பேர் பலியானது தெரிந்ததே இதையடுத்து மேற்கொண்ட சோதனைகளின் பயனாகவே இக் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

அமெரிக்காவில் மேற்கொண்ட நடவடிக்கையையடுத்து பிரிட்டன், இத்தாலி, சுவிட்சர்லாந்து ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள விமானங்களும் சோதனை நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இச்சோதனைகளை அடுத்து அத்திலாந்திக் சமுத்திரத்தின்மேல் பறந்து கொண்டிருந்த இரு 'டி-சி-10' பிரிட்டிஷ் விமானங்கள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆக்கிரமித்த மண்ணிலிருந்து வெளியேறும் வரை

# இந்தியா சீனாவுடன் நேசநாடாக இருக்காது

## பிரதமர் தேசாய் கருத்து

புதுடில்லி, மே, 30

இந்திய மண்ணிலிருந்து சீனா வெளியேறும் வரை இந்தியா முற்றிலும் நேசநாடாக இருக்க முடியாதுஎன்று இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

இந்தியா சகல நாடுகளுடனும் சமமான தோழமை கொள்ளவே விரும்புகிறது என்றும் தெரிவித்த திரு தேசாய் சீன-இந்திய உறவினால் ரஷ்ய இந்திய பிணைப்புகளை ஒரு போதும் சீர்கெடாது என்றும் இந்தியா சீனாவைப் பாதிக்கும் வகையில்ரஷ்யாவுடன் உறவு கொள்ளாது என்றும் கூறினார். (இ)

## சிறுவர்தின விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர்தின வாரத்தையொட்டி உவரம்புலம் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நாளை சிறுவர்தின விழா கொண்டாடப்படவிருக்கிறது.

திரு. பரம்தில்லைராஜா சிறப்புரை நிகழ்த்துவார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

'சிறுவர் ஆண்டின் முக்கியத்துவமும் நோக்கமும்' பற்றி ஆசிரியர்கள் உரையாற்றுவர். (ஈ)

## பட்டப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தால் நடாத்தப்படும் இவ்வாண்டுக்கான 'பண்ணிசை மாமணி'ப் பட்டப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 30ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையின் நான்காண்டுப் பாடத்திட்டத்திற்கமைந்த 'பன்னிரு திருமுறைத்திரட்டு' ஆதீனத்தால் வெளியிடப்பட விருப்பதாக ஆதீனச் செயலாளர் தெரிவித்தார். (ஈ-வி)




சேர்கோப்பூர்

36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறுள அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6.,

me/ADS

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
ராஜன் - பானுமதி
பத்துமாதபந்தம்

Rio Phone : 7667
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

## ஆலால் கூறியது இதுதான்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை தேர்தலை அடுத்து அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பணியகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மாநகரசபை வளவில் உள்ள சிலை ஒன்றை அகற்றுவது குறித்து நிருபர் ஒருவர் கேட்டகேள்விக்கு பதில் அளித்த சட்டத்தரணி திரு. எம். ஆலாலசுந்தரம் குறிப்பிட்ட சிலையை அகற்றுவது பற்றி புதிய மாநகரசபை ஆலோசிக்கும் என்றே கூறினார் என்பதே சரியாகும் என நமது நிருபர் தெரிவிக்கிறார்.

ராஜா (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு சங்கள் கலர் புதிய பிரதி

REGAL 2nd CROWDED WEEK
(Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ராணி (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனா
ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
இன்னும் பலர் சிறப்புடன் நடித்த
எங்களில் ஒருவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி: 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு: 10-30, 2-30 6-30 & 9-45
எம். ஜி. ஆர். — சாவித்திரி
வேட்டைக்காரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—சரோஜாதேவி
என் தம்பி

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் - பிரமிளா லக்ஷ்மி (பசு) நடித்த
கோமாதா என் குலமாதா
(புதிய பிரதி - சங்கீதவர்)

4-வது வெற்றி இறுதி வாரம்!
சாந்தி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இராஜேந்திர குமார் — ஹேமமாலினி — பானுரேகா
"கோரா அவுர் காலா" ஹிந்தி கலர்
யாழ்நகரில் இப்படம் இதுவே கடைசித்தடவை

இன்று மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30 2-30, 6-15, 9-30.
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

23-வது வாரம்
வின்சர் (கொழும்பிலும்) போன் 1466 தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(சங்கீதவர் கலர்)

# பிள்ளைகளின் தேவைகளே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் பிச்சை எடுத்துத் திரியும் சிறுவர் சிறுமியர், தினமும் நம் கண்களில் தென்படும் காட்சி... கையிலிருக்கும் சில்லறைக் காசுகளை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, பின்னர் எப்பொழுதாவது ஒரு கணம் அவர்களின் வாழ்க்கைப் பற்றி சிந்தித்துள்ளோமா? யார் தான் சிந்திப்பார்கள்...

சிறுவர்களின் நலவாழ்வுக்காக மேல்மட்டத்தில் திட்டப்படும் திட்டங்கள், கீழ்மட்டத்தில் நடைமுறையில் செயல்படும்பொழுது திட்டப்பட்ட திட்டம் உருமாறியிருப்பதை எத்தனை பேர் கவனிக்கிறார்கள்... தங்களின் பிள்ளைகளுக்காகவோ தங்களுக்காகவோ இத்திட்டங்கள் திட்டப்படவில்லைத்தானே! யாருக்கோதானே என்ற மனப்பான்மை அலட்சியம்போன்ற வற்றால் வருங்காலச் சமுதாய வளர்வின் அமைப்பையே கோணலாக்கிவிடுவதை அவர்கள் உணர்கிறார்கள் இல்லை.

கல்வி, பிள்ளைகளின் முழு வாழ்வையுமே மாற்றியமைக்கும் சாதனம்... இக்கல்விக்காக நாம் எடுக்கும் நடவடிக்கைகளோ பல. ஆனால் இக்கல்வி நடைமுறை சரியான முறையில் எத்தனை சிறுவர்களை எட்டியுள்ளது?

நகரங்களிலும் ஓரளவு வளர்ந்துள்ள கிராமப்புறங்களிலும் வாழும் பலரின் வாழ்வைக் கண்டோட்டத்தில் கொண்டு இன்றைய கல்வி நிலையின் தாக்கத்தை எடைபோடுவது முற்றிலும் சரியானதில்லை.

மிகவும் பின்தங்கிய கிராமங்கள், இலங்கையின் பல மாவட்டங்களில் காணப்படுகின்றன. வவனியா மாவட்டம், பொலனறுவை மாவட்டம், கிழக்கில் பல கிராமங்கள், மொனராகலை மாவட்டம், மலையகத்தின் பல பகுதிகளில் கல்வியின் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. சூழலாலும், வாய்ப்பின்மையாலும் கல்வியின் பயன் உணராத சமூகங்கள் பல இன்று இம்மாவட்டங்களில் வாழ்கின்றன.

பரந்த வயல்வெளிகளில், கொதிக்கும் வெயிலில் தங்கள் சிறு கைகளில் வீட்டின் கஞ்சித் தேவைக்கான தானியமணிகளைப் பொறுக்கும் சிறுவர் சிறுமியரை எம்மில் எத்தனை பேர் கண்டிருப்பீர்கள்.

கொதிக்கும் வெயிலிலும், கலகலவென தெளிந்த நீரோட்டம் போன்ற பார்வையுடன் மகிழ்வின் முழுமையுடன் விளங்கும் மலர்ந்த முகங்களுடன் ஒவ்வொரு மணிகளாக வயல்வெளிகளில் பொறுக்கும் அந்த வாழ்வின் அரும்புகளுக்கு, பின்னால் இருண்டு வரும் வாழ்வின் தாக்கத்தை உணரமுடிகின்றதா?.

தகுந்த வழிகாட்டிகளின் மையமான சரியான முறையில் பிள்ளைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கத் தெரியாத பெற்றோர்களும், பாசத்தின் விலை என்ன எனக்கேட்கும் மிகச் சில பெற்றோர்களுமே வருங்காலச் சந்ததியின் உரிமையை மறுப்பவர்கள் நசுக்குபவர்கள் ஆவர்.

பிள்ளைகளே, இளமையின் கட்டுக்கடங்காத உணர்வால் பெற்றுத் தள்ளுபவர்கள், தங்களின் பொறுப்பற்ற தன்மையின் தாக்கத்தைப் பிள்ளைகள் மேல்காட்டி அவர்களின் பிஞ்சு மனதை சிதைக்க இடையச்செய்வதால் கிடைக்கும் லாபம் என்ன?

அன்பாலும், ஆதரவாலும் வாழும் பிள்ளைகளுக்கும் ஏமாற்றத்திற்கும் எரிச்சலுக்குமுள்ளாகும் பிள்ளைகளுக்கும் வாழ்வில் எவ்வளவு வேறுபாடு...

அன்பும், பரிவுமே சிறுவர்களின் வளமான வாழ்வை நிர்ணயிக்கும் காரணங்கள். பணலாபம்மிகுந்த செல்வநாடுகளின் விரக்தி மனப்பான்மையால், தவறான வழியில்சென்று வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளும் வாலிபர்களையும், இளம் பெண்களையும் இன்று நாம் கண்முன்னால் காண்கிறோம்.

சுதந்திரம் என்ற பெயரில் பிள்ளைகளைக் கண்காணிக்காமல் விட்டு, விட்டு, இளமையில் அவர்களின் வேலைகளைத் திலே கிளர்ந்தெழும் உணர்வுகளுக்கு புகலிடம் காட்டிவிட்டு பின்னர் ஒப்பாரிவைக்கும் தாயார், தந்தைமார் இதோ நம் கண்முன்னே. வளர்ந்த பிள்ளைகயுடைய சில தாய்மாரின் நாகரீக அலங்காரங்கள் பிள்ளைகளையே குனிய வைப்பதைக்காண்கிறோம். வழிகாட்டியாக விளங்கவேண்டிய தாயோ பிள்ளைகளின் தவறுகளுக்கு வழிகாட்டியாக விளங்குவதை நம்வெண்திரை கரங்களை கூறிநிற்கின்றன.

பிள்ளைகளுக்கு தாய் தான் முதல்வர். தாய் தன்பிள்ளைக்கு தேவையான, உணவு, உடை, போன்றவற்றை நிர்ணயிப்பவர். பிள்ளைகளின் நடத்தைகளுக்கு அடிப்படையான பழக்கவழக்கங்களை அமைத்துக் கொடுப்பவரும்தாயே. அழகையும் அழகின்மையையும் சரி-பிழையையும் காட்டிக்கொடுப்பவளும் தாய்தான்...

பிள்ளைகளின் அறிவு பூர்வமான ஆதார அடிப்படை வளர்ச்சி பெற்றோரின் வாழ்வின் பிரதிபலிப்பிலிருந்தே ஆரம்பமாகின்றன. அவர்களின் அன்பான, அமைதியான் நெறியான வாழ்வே பிள்ளைகளின் வாழ்வையும் பிரகாசிக்க வைக்கும் அங்கே கிடைக்கும் பரிபூரண அன்பு......நாளை எம் பிள்ளைகளை உலகை அன்புமயமாகும் பணியில்ஈடுபடவைக்கும்

அங்கே நிலவும் மகிழ்வு நிறைந்த அமைதி, பிள்ளைகளை மகிழ்வு நிறைந்த சமூகமாக்கும் எதுகிடைக்கின்றதோ அது தான்விடை.

தகுந்த வழிகாட்டியின்மையால், பொருளாதார பாதிப்பினால் தங்கள் வாழ்வின் பனிப்படலத்தை சூழ வைத்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள். பிள்ளைகள் ஆயிரமாயிரம், இன்று எத்தனை தமிழ் இல்லங்களில் படித்து முன்னேறிவரக்கூடிய பிள்ளைகளெல்லாம், குறிப்பாக பெண்கள் சமயலறையில் புகையுடன் போராடிக்கொண்டு பிரகாசத்தின் எதிர்காலத்தை காக்கும் விழிகளுடன் எதிர்நோக்கி ஏக்கத்துடன் நிற்பதை பல இடங்களில் கண்டுள்ளேன்.

வாழ்வின் பொருளாதாரத் தேவைகளை ஓரளவேனும் நிவர்த்திசெய்துகொள்ள, கல்வியையேஇடைமுறியில நிறுத்திவிட்டு தெருவோரங்களிலும் புடவைகளுக்கு அசிடும் இடங்களிலும் மிகச் சொற்ப ஊதியத்தில் பணியாற்றும் பிள்ளைகள் பல இவர்களில் எத்தனையோபேர் மிகச்சிறந்த அறிவுள்ளவர்கள். ஆனால் அவர்களின் ஏக்கம் நிறைந்த விழிகளும். விரக்தி நிறைந்த முகங்களும்......எங்கே வளமான எதிர்காலம் எனத் தேடுவதை நம்மில் எவ்வளவு பேர்கள் சிந்தித்திருப்பார்கள். பெட்டிகளில் சிதனப்பேய்க்கு பலியிட உறங்கிக்கிடக்கும் பணத்துடன், சமுதாய முன்னேற்றத்தை மறந்து உறங்கிடக்கும் நம்மவர்களின் போலிவாழ்க்கையால், அழிந்து போகும் இந்த தலைமுறையினருக்கு என்னலாபம்? அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற கருணையில்லா உள்ளங்கள் கருணையின் உறைவிடமான இறைவனிடம் செல்வதின் அர்த்தமென்ன? இதோ நம் கண்முன் உலாவும், கராஜில் வேலைசெய்யும் கிழிந்த சேர்ட்டுடனும், ஒரு கோப்பை வெறும் தேநீருடனும், எண்ணெய்க்குள், எண்ணெயாக, உதிரிப்பாகங்களைத் துடைக்கும் பாலன் பாவம் பதின்மூன்று வயது.

இதோ காலை ஏழு மணிக்கே ஒரு சோப்பை தேநீருடன் புடவை அச்சிடும் நிலையத்திற்கு பாய்ந்து, பாய்ந்து சென்று... இப்பொழுது சோர்வின் முழுச்சின்னமாக இரவு ஆறுமணிக்கு திரும்பிவரும் இந்த கலா...... க. பொ. த. (சா) தரத்தை தொடர முடியாமல் பொருளாதார சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஓர் அன்புத்தங்கை.

[6ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கருத்து

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கும் பிரதேசசுயாட்சி சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும் என்ற முடிவுக்கு வந்தது.

சிங்களப் பிரதேசங்களில் வாழும் மலையகத் தமிழர்கள் பிரிவினையை ஏற்கவில்லை, தனித்துவமான கலாச்சாரமும் பண்பாடுமுள்ள முஸ்லிம்களும் அதேவிதமாக பிரிவினையை விரும்பவில்லை.

இலங்கையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினரே. பரவலாக இந்தியா, இலங்கை மலேசியா போன்ற நாடுகளில் வாழும் தமிழ்பேசும் மக்களோடு ஒப்பிடும்போது சிங்களம் பேசுபவர்கள் சிறுபான்மையினராகிவிடுவர்.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் இலங்கைத் தமிழ்மக்கள் வாழ்கின்றார்கள், அவர்கள் தம்மைத்தாமே ஆளும் உரிமையைப் பெறுவதுமூலம் தமது தனித்துவத்தையும் பிரதேச அபிவிருத்தியையும் சிறப்பாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சிக்காலத்தில் குறிப்பாக ஒருசில பிரிவு மக்கள் சரித்திரரீதியான காரணங்களினால் அரசாங்க தனியார் துறைகளில் சிங்கள மக்களிலும் பார்க்க கூடிய பங்கு வகித்தனர். ஆனால் இவை ஒரு சாட்டாக வைத்து பிறிய பிரிவு மக்கள் தற்பொழுது தங்களுக்குச் சலுகை கோருவதும் தமிழ்பேசும் மக்களுக்கு சமசந்தர்ப்பம் அளிக்கத் தவறுவதும் நியாயமாகாது

இவைகளைக்கருத்தில்கொண்டால் பிரதேசசுயாட்சியுடைய ஐக்கிய இலங்கையிலேயே சகல சிறுபான்மை மக்களின் பிரச்னைகளையும் தீர்க்கமுடியும் என்ற உண்மையை உணரலாம்.

இவ்விதமான தீர்வை மேற்குறித்த 4 கட்சிகளும் ஆதரிக்க முன்வந்தால் உடனடியான ஒரு இடைக்கால தீர்வைக் காணமுடியும்! இதனைச் செய்யத் தவறின் இவர்களுக்கு இப் பிரச்னையைத் தீர்ப்பதில் அக்கறையில்லை என்றே கருதவேண்டியிருக்கும்.

இடதுசாரிஇயக்கமும் குறிப்பாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பதட்டநிலையைத் தணிப்பதும் இனங்களுக்கிடையில் நம்பிக்கையை வளர்ப்பதுமான எந்தத் இடைக்கால தீர்வையும் ஆதரிக்கும். எனினும் ஏற்றத் தாழ்வுடைய முதலாளித்துவசமூகஅமைப்பில் இவற்றிற்குநிரந்தர தீர்வு காணமுடியாதுஎன இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி நம்புகின்றது. ஒரு சோஷலிச சமுதாய அமைப்பில்தான் சிறுபான்மையினர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என விஞ்ஞான சோஷலிசமும் சோஷலிச நாடுகளின் அனுபவங்களும் உறுதிப்படுத்துகின்றன.

எஸ். விஜயானந்தன்
[உதவிசெயலாளர்]
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, யாழ் பிரதேசக்கிளை.

நாகம்ஸ்
(கன்னடம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
[சாந்தி]

# பிள்ளைகளின்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அதோ, கூப்பன் பொருட்களை தூக்கமுடியாமல் தூக்கிச் செல்லும் பார்வதி... ஒரு நேர கஞ்சிக்காக தவித்த ஒரு குடும்பத்திலிருந்து வந்து, இங்கு ஓர் இல்லத்தில் பணியாற்றும் ஒரு சிறுமி... அறிவும் பிரகாசமும் வீசும் அந்தக் கண்கள் உறங்கிக்கிடக்கும் அறிவினை எடுத்துக்காட்டும் சின்னம்.

சப்பாத்து, செருப்பு தைக்கும் கஸ்தூரியார் வீதி நடைபாதையோர கடையில் வேகமும் மூரமாக ஒரு செருப்பை தைக்கும் கண்ணன்... தாயை இழந்த ஒரு வயோதிபத் தந்தையுடன் ஆறுபிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் சிறுவன் வயதோ பதின்மூன்று செருப்பைத் தைக்கும் இந்தச் சிறுவன் வாழ்வில் ஒழுங்கற்ற நிலையிலிருக்கும் வாழ்க்கை இழிசல்களை யார் தைப்பார்கள்

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் 'பனங்கிழங்கு' "பனங்கிழங்கு" என ஒரு ரூபாய்க்கு எட்டு பனங்கிழங்கு விற்கும் இளஞ்சிறு மகேஸ்வரியும் மகேஸ்வரனும் இல்லத்தில் இன்றைய உணவை நிர்ணயிப்பவர்கள். அந்த சின்னஞ்சிறு மலர் போல் மலர்ந்து நிற்கும் சிறுமிடமே. பனங்கிழங்கிற்காக, கேவலம் இரண்டு மூன்று சதத்திற்காகப் பேரம் பேசும் நம்மவர்களின் கேவலமான நிலையை என்னென்று வர்ணிப்பது. இப்படிப்பட்ட இவர்களின் நினைவில் அந்த பிள்ளைகளின் வறுமைநிறைந்த வாழ்க்கை நிழலாட ஏன் மறுக்கின்றது என்பது புரியாத புதிர்.

அக்காவும், அண்ணனும் பழங்கிழங்கு விற்றுக் காசு கொண்டுவந்தபின்னர் ஒரு படி அரிசியும், கீரையும் வாங்க கடைக்குப்போக ஆவலுடன் வழியை நோக்கி நிற்கும் சின்னஞ்சிறு சிறுவன் கோபியும் சிறுமி கல்யாணியும் "விறகு இல்லையே விறகையும் வாங்கி வரச் சொல்லவேண்டும். பாவம் மகேஸ். தேத்தண்ணி கூட குடிக்காமல் போய்விட்டாளே. இன்றைக்கு அவளுக்கு இரண்டு மூன்று பிஸ்கட்டாவது வாங்கி கொடுக்கவேண்டும் என கண்கலங்கி கொண்டு நிற்கும் வீட்டிற்குள் வலயம் வரும் அக்காவும்

இருட்டுக்குள் இருட்டாக இருமலுடன் போராடும் கந்தையும் இவர்கள் ஒருகணம் மேலும் சிந்திக்கிறார்களா?

சமுதாயத்தில் வாய்ப்புகள் சமமாக கிடைக்காததினால் தான் இந்த நிலை என்பதை பலரும் யோசிப்பதில்லை.

வசதியுள்ளோர் சமுதாயத்தில் சகலருக்கும் சமமாக கிடைக்கவேண்டிய சில வாய்ப்புக்களை தங்கள் செல்வாக்கால் வாய்ப்புகளில் பாதிப்பும் சமமின்மையும் ஏற்படுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

சமூகமும் அரசும் செய்து கொடுக்கும் பல வாய்ப்புகள் தேவைகளை எதிர்நோக்கி நிற்கும் சிறுவர்களை அடையாமல் போகின்றன. நாங்கள் அணுகவேண்டியது வாய்ப்பின்மை, சமசந்தர்ப்பம் போன்றவை அணுக வாய்ப்பின்றி வாழும் சிறுவர்களையே. வருங்காலம் அவர்களுக்கு ஒளிமிகுந்ததாக மலரும் என்ற நம்பிக்கையை விதைப்போம்.

சிறுவர்களை மனிதஇனத்தின் செல்வங்களாக மதிப்போம். ஏழைச்சிறுவன், பணக்கார சிறுவன், தாழ்த்தப்பட்டவன், அது, இது என்ற பிரிவுகளின் மூலம் சிறுவரைப் பிரிக்காமல் நம் வருங்கால தொடர்கள் என்ற ஒரே நோக்கில் பிள்ளைகளின் எதிர்காலத்தை ஏன் சமுதாயத்தின் எதிர்காலத்தையே நாம் அமைக்க முன்வரவேண்டும்.

பிள்ளைகளின் தேவைகள் மிகவும் எளிமையானது.

உணவு அன்பு, பாதுகாப்பு நோய்க்கெதிரான பாதுகாப்பு, கல்விக்கான சமவாய்ப்பு வருங்காலத்தை அமைப்பதற்கு இவையே தேவைகள்.

பிள்ளைகளின் தேவைகளை, பிள்ளைகளின் மாறுபாவத்துடன் அணுகவேண்டும். எங்கள் மனநிலையில் நின்று பிள்ளைகளை நோக்கினால் நாம் விரக்தி மனப்பான்மையை பிள்ளைகளிடம் விதைப்பவர்களாகி விடுகிறோம்.

பிள்ளைகளின் தேவைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டியவை.

கல்விக்காக ஏங்கிநிற்கும் சிறுவர்கள், அன்பிற்காக, பாசத்திற்காக தவிக்கும் பிள்ளைகள் ஒருநேர உணவிற்காக காத்திருக்கும் சிறுமி கிழிந்த உடையுடன் குளிரில் நடுங்கும் சிறுவன் இவர்களெல்லாம் நாளைக்காக காத்திருக்க முடியாது. நாளை அவர்களுக்கு நீண்ட இடைவெளி. அவர்களுக்கு நாளை என்ற பதில் எம்மால் கூறப்படக்கூடாது.

## சிறுவர் தினவிழா

[வவுனியா]

வேகாயன்குளம் மகாவித்தியாலயத்தில் இன்று சிறுவர் தினவிழாவும் "தாமரை" மூன்றாவது மலர் வெளியீட்டுவிழாவும் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

வித்தியாலய அதிபர் திரு சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிரதம கல்வியதிகாரி திரு. எம். சிமியாம்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.

## கைத்தொழில் போதனாசிரியர்கள் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

கைத்தொழில் ஸ்தாபனங்கள், கைத்தொழில் நிறுவனங்களின் போதனாசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 2-ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியில் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறும் இக்கருத்தரங்கு தேசிய தொழிற் பயிற்சிச் சபையின் ஆதரவுடன் மாவட்ட ரீதியிலான 6-வது கருத்தரங்காக அமைகின்றது. அன்று காலை 8-00 மணிமுதல் 5-00 மணிவரை நடைபெறும் இக்கருத்தரங்கை தேசிய தொழிற் பயிற்சிச் சபையின் பணிப்பாளர் ஜனப் முகைதீன் காலை 8-00 மணிக்கு குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார், 9-00 மணிக்கு தே. தொ. ப. சபையின் உதவிப் பணிப்பாளர் திரு. டி. ஜே. நாணயக்கார சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

யாழ். மாவட்ட ரீதியிலான தொழிலதிபர்களும், போதனாசிரியர்களும் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்கில் 'பயிற்சியும் பழகுதல் பற்றிய முறையும், 'பயிற்சித் திட்டம் வகு

## தென் கிழக்கு ப. நோ, கூ. ச. பத்துக் கிளைகளில் போட்டியில்லை

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 10 கிளைகளுக்கு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

கொடிகாமம், எச்சாய்-பாலாவி, அல்லாரை, நாவற்காடு ஆகிய நான்கு கிளைகளில் மட்டும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இக்கிளைகளின் தேர்தல் இம்மாதம் 12ம் தேதி நடைபெறவிருக்கிறது.

கொடிகாமம் கிளை 1ல் தேர்தலை நடத்துவதால் வாக்காளர்களுக்குப் பல வசதியீனங்கள் ஏற்படுமென்றும், இக்கிளைத்தேர்தலைக் கொடிகாமம் திருநாவுக்கரசு மடாலயத்தில் நடத்துமாறும், அப்பகுதி வாக்காளர் தேர்தல் அதிகாரியிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இடைக்குறிச்சி, விடத்தல் பளை, மிருசுவில் [நவஜீவனம்], எழுதுமட்டுவாள் கிளைகளில் தலா 7 உறுப்பினர்கள் மட்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக்கிளைகள் ஒவ்வொன்றுக்கும மேலும இரு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

[உ-அ]

த்தல்' என்ற தலைப்புகளில் பல விரிவுரைகளை தொழில் வல்லுநர்களும் விரிவுரையாளர்களும் நிகழ்த்துவார்கள்.

(கா)

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 17-ம் திகதி

வியாழக்கிழமை

(31-5-1979)

**மேடம்:** மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். தொழிலில் துரிதமுன்னேற்றம் உண்டு. பெரியமக்களின் தொடர்புகள் பெருகும்.

**இடபம்:** புதிய கோணத்தி லிருந்து பொருள் வரவிற்கும், இடமுண்டு. துணிவையே துணைவெனக்கொண்டு எக்காரியத்தையும் சாதிப்பீர்கள். பொதுசனத் தலைமையுடன் புகழும் சேரும்.

**மிதுனம்:** வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம். உணவு விடயத்தில் கவனஞ் செலுத்தவும். வியாபாரிகள் புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

**கடகம்:** இளைப்பத்துக்கள் மத்தியில் பூசல் தோன்றும் மனைக் குழைச்சலினால் வேதனைப்படுவீர்கள், பிள்ளையொன்றின் உடல் நலம் கவலையைத்தரலாம். தெய்வ நம்பிக்கை வேண்டும்.

**சிங்கம்:** அதிகாரப் பேறும் கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு. ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் அதிக மகிழ்ச்சி நிலவும்.

**கன்னி:** தூக்கம்விழிகளைத் தழுவ மறுக்கும் கடந்தகால நிகழ்ச்சிகள் அலைமோதும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

**துலாம்:** மதிவழி நடப்பின் மற்றவர்கள் பொறுமைப்படும் அளவிற்கு முன்னேற்றமுண்டு. அறிஞர்களின் ஆதரவுதாராளமாகக் கிடைக்கும்

**விருச்சிகம்:** வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறும். புத்திரர்களால் பெரும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு உள்ளத்தில் உவகை தரும் பெரிய இடத்துத் தொடர்பு பெருமையைத் தரும்.

**தனுசு:** எக்காரியத்திலும் அதிக கவனஞ் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவிசெய்யப்போய் குறைகேட்க நேரிடலாம். உடல்நலத்தைப் பேணவும்.

**மகரம்:** களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறலாம். நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாகும். காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புகள் இறுகும்.

**கும்பம்:** அரசபயத்திற்கு இடமுண்டு, வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். மின்னியல் பொறியியல் துறையில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** பூமியால் இலாபம் உண்டு. புத்திரர்களால் புகழும் சேரும். உடல் நலம் பாதிக்கப்படக் கூடும். ஆகையால் உணவுவிடயத்தில் கவனம் செலுத்தவும்.

சோதிடக்கலாநிதி

[க] திருமலை க. வேலுப்பிள்ளை

## சுழிபுரம் இரட்டைக் கொலை: 6 எதிரிகளும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் இரட்டைக்கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சுழிபுரத்தில் 1978ம் ஆண்டு பெப்ரவரி 19ம் தேதி சங்கரன் நாராயணன் தம்பையன், சின்னத்தம்பி செல்லையா, முருகன் சின்னத்தம்பி, முத்தன் தவத்துரை, பொன்னன் துரையன், இன்னத்தம்பி செல்வராசா அல்லது செல்வம் ஆகியோர் சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும், சின்னப்பொடி முருகேசு, மாணிக்கம் சின்னப்பொடியன் ஆகியோரைக் கொலைசெய்ததாகவும், சின்னப்பொடியன் நடேசுவுக்குப் படுகாயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம், ரி. குணரத்தினம், செல்வி ஆர். ராஜரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார்.

## ஏகமனதாகத் தெரிவு

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் காங்கேசன்துறை 10ம் இலக்க கிளைக்குழுவுக்கு உறுப்பினர்கள் யாவரும் போட்டியின்றி ஏகமனதாக தெரிவாகியுள்ளனர்.

தேர்தல் உதவி அதிகாரி திருத கனகரத்தினம். நியமனப்பத்திரங்களை இக்கிளையில் வைத்து ஏற்றுக்கொண்டபோது திருவாளர்கள்; நடராசா சபாநாதன், பூதப்பிள்ளை சண்முகதாஸ், மயில்வாகனம், எஸ் ஆர். ஞானசுந்தரம், இரத்தினம், விநாயகமூர்த்தி ஆகியோர் ஏகமனதாக கிளைக் குழுவுக்குத் தெரிவாகினர்.

## எண்ணை விலையை கூட்டாதீர்

### கார்ட்டர் வேண்டுகோள்

வாஷிங்டன், மே 30

எண்ணையின் விலையை மேலும் அதிகரிக்காது எண்ணை உற்பத்தியை அதிகரிக்குமாறு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் எண்ணை உற்பத்தி ஏற்றுமதி ஸ்தாபன நாடுகளைக் கேட்டுள்ளார்.

## சமக்கிராநந்தா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சுவாமி விவேகானந்தருடைய வாழ்க்கையும் உப[illegible] களும் [illegible]னும் [illegible] பற்றி உரைநிகழ்த்துவார்

(உ-அ)

## திருமதி பூட்டோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடத்தாம் தயாராய் இருப்பதாக காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ஜனாப் பூட்டோவின் மனைவி அறிவித்துள்ளார்.

தமது கணவரின் அரசியல் போராட்டத்தை தொடர்ந்து நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முன்னர் எடுக்கப்பட்ட முயற்சிகளின்போது அவ்வாறு அனுப்பப்படும் குழுவில் எதிர்தரப்பினரும் இருக்கவேண்டுமென அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தப்பட்டதாகவும் அதனாலேயே இக்குழு செல்வதில் தாமதம் ஏற்பட்டதாகவும் கருதப்படுகின்றது. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானரத்தினம் குமாரசாமி

காலஞ்சென்ற நெடுந்தீவு உடையார் குமாரசாமியின் மனைவி ஞானரத்தினம் 30-5-79ல் உரும்பராயில் காலமானார். இவர் காலஞ்சென்ற ராசம்மா அண்டலூட், இராசையா [மலேசியா], புஷ்பகாந்திஅம்மா சத்தியநாதன், சற்குணம் தம்பிராசா, பாலசந்திரன் ஆகியோரின் சகோதரியும், யோகேந்திரனின் [அரேபியா] மாமியுமாவார். அன்னாரது நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

2620

## மரண அறிவித்தல்

### .V. அழகர்சாமிசெட்டியார் (அழகு)

நெல்லியடி கரவெட்டியில் வசித்தவரும் பிரபல வியாபாரியுமான R V அழகர்சாமி செட்டியார் (அழகு 30-5-79ல் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 31-5-79 (இன்று) காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் 439, கே கே எஸ் ரோட் இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனஞ் செய்வதற்காக எடுத்துச்செல்லப்படும் இத்தகவலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்; R. V. A. இராமச்சந்திரன் சகோதரர்கள்

26 6

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No 49, Telegram: Eelanaadu! Jaffna 499,